## 'சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்'


**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. N. Rujani,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*


### ஆய்வுச் சுருக்கம்


இந்து நாகரிகத்தில் சித்தர்களுக்கு ஒரு அழுத்தமான இடம் உண்டு. காலந்தோறும் ஏற்பட்ட சிந்தனைப் பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. ஸித் என்னும் வடமொழி வேர்ச்சொல்லே ஸிது என்றாகி, ஸித்த என்னும் சொல்லாக உருமாறியது. இது எண்வகைச் சித்துக்களைக் கைகூடப் பெற்றவர்களைக் குறிக்கும். இதுவே தமிழில் சித்தர் என்றாகியது. சித்தர் பற்றியும், அவர் தம் நெறி பற்றியும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சித்தர்கள் என்றால் கைகூடுவதற்கு அரிதான எட்டு வகை சித்திகளும் கைவரப் பெற்றவர்கள், சித்தத்தை வென்றவர்கள், உடலோடு வாழ்ந்து கொண்டே வீட்டின்பம் காண்பவர்கள் என்பது பொருளாகும்.

இந்து மெய்யியல் வரலாற்றில் சித்தர்களின் சிந்தனை மரபானது தனக்கே உரித்தான பல சிறப்பியல்புகளை உள்ளடக்கியிருப்பதனைக் காணலாம். சித்தர் மெய்யியலானது தத்துவ ஆராய்ச்சி என்ற நிலையினைத் தாண்டி இந்து நாகரிகத்தின் சமூக, பண்பாட்டு, அறிவியல் கூறுகளை பல நிலைகளில் வளம்படுத்தியுள்ளமையினைக் காணலாம்.

சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு என்று தொகைப்படுத்தினாலும் அவர்கள் எண்ணிலடங்கார். அதே போல அவர்களது எண்ணங்களும் எல்லைகளுக்கு உட்பட்டன அல்ல. வரம்பு கடந்தவை. எல்லையற்ற நோக்கும், எதையும் கேள்விக்குள்ளாக்கும் இயல்பும், இகழ்ச்சிப் போக்கும் சித்தர் சிந்தனைகளில் ஒலிக்கின்றன.

உலகெங்கிலும் உள்ள மெய்யுணர்வாளர்களைப் போலன்றி, சித்தர்கள் தங்களது மெய்யுணர்வு அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு வகை உத்தியினைக் கையாண்டுள்ளனர். அந்த வகையில் சித்தர்களால் கையாளப்பட்ட உத்தியானது, சித்தர்களின் சிந்தனைகளில் மிகவும் நுட்பமானதும், முதன்மையானதும், இரகசியங்கள் நிறைந்ததுமான குறியீட்டு மொழியாகும். மேலோட்டமாகப் பார்த்தால் சொற்களின் பொருள் ஒரு வகையாக இருக்கும். ஆனால் அவற்றின் நுண்பொருள் வேறு ஒரு வகையாக இருக்கும். சில சிந்தனைகள் வேடிக்கையாகவும், முரண்பாடு நிரம்பியதாகவும் இருக்கும். அவற்றின் கருவுக்குள் ஆழ்ந்த ஞானப் பொருள் சில சொற்களுக்கு நிகண்டில் இல்லாத வேறொரு பொருள் சித்தர் சிந்தனை மரபிலே உண்டு.

சித்தர்கள் தம் சிந்தனைகளில் புரியும் மொழி, புரியாத கருத்துக்கள், பேச்சு வழக்குத் தமிழில் பேருண்மைகளை மறைத்து வைத்துள்ளனர். உதாரணமாக முப்பாழ், சாதிக்குதிரை, மாங்காய்ப்பால், தேங்காய்ப்பால் என்பன போன்ற குறியீட்டுச் சொற்கள் பல்வகை கருத்துக்களுக்கு இடமளிக்கின்றன. சித்தர்கள் கையாண்ட குறியீட்டு சொற்களுக்கு தனி அகராதியே தேவைப்படுகின்றது.

சித்தர்கள் பல்வேறு நோக்கங்களின் பொருட்டு தமது சிந்தனை மரபுகளில் குறியீட்டினைப் பயன்படுத்தியுள்ளனர். அந்தவகையில் 'சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்' இனை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

மேலும் இவ்வாய்வில் இந்து நாகரிகத்தில் சித்தர்களின் குறியீடு கொண்டுள்ள நிலைப்பாட்டினை அறியும் நோக்கிற்காக, இந்து நாகரிகத்தில் காணப்படும் குறியீடுகள் இலக்கியங்கள், சின்னங்கள், வழிபாடுகள், சடங்குகள் என்ற வகையில் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படுவதற்கு பல நோக்கங்கள் காணப்படுகின்றன. இவ்வகையில் இவ்வாய்வானது மேல்வரும் நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்படுகின்றது, இந்து நாகரிகத்தில் சித்தர்களின் குறியீடு கொண்டுள்ள நிலைப்பாட்டை கண்டறிதல், சித்தர்களின் குறியீட்டு மொழி தொடர்பான புரிதல்களை ஏற்படுத்துதல், சித்தர்கள் குறியீட்டு மொழியினை பயன்படுத்தியமைக்கான காரணங்களைக் கண்டறிதல், இந்து நாகரிகத்தில் காணப்படும் குறியீடுகளை இனங்காணல்.

சித்தர்கள் உலகெங்கிலும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் உள்ளனர். நவகோடி சித்தர்கள், சித்தர்கள் அனேகங்கோடி என்றெல்லாம் சித்தர் பாடல்கள் உள்ளன. 'சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்' என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வானது, பதினெண் சித்தர்களை மையப்படுத்தி அமைந்துள்ளது.

ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது ஆய்வின் உண்மைத் தன்மையை பேணுவது ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளின் நம்பகத் தன்மையை பொறுத்து அமைகின்றது. அந்த வகையில் ஆய்வுகளில் தரவு சேகரித்தல் என்பது முக்கியமான ஒரு நுட்பமாகக் காணப்படுகின்றது. பொதுவாகத் தரவுகள் இரண்டு வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

முதலாம் நிலைத் தரவுகளாக பதினெண் சித்தர் பாடல்கள் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வோடு தொடர்புடையதாக இதுவரை வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், உரை நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தகவல்கள் என்பவை இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பதினெண் சித்தர் சிந்தனை மரபினை ஆய்வு எல்லையாகக் கொண்டு சித்தர் மெய்யியல் மரபில் உள்ள குறியீடுகளை மையப்படுத்தியாக அமைந்துள்ள இவ்வாய்வானது விபரண ஆய்வாகும். இவ்வாய்வின் மூன்றாவது அத்தியாயத்தில் வரலாற்றியல் முறையும் கையாளப்பட்டுள்ளது.

சித்தர்கள் இயற்கை சார்ந்த விடயங்களினை மட்டும் பேசாது, இயற்கை அதீதம் சார்ந்த விடயங்களினையும் பேசியுள்ளனர். அந்த வகையில் பௌதீகம், பௌதீக அதீதம், சாதனையியல் சார்ந்த விடயங்களினை நடைமுறை வாழ்வியலோடு ஒன்றிணைத்து கூறியுள்ளமையினைக் காணலாம். இதனை வெளிப்படுத்தி நிற்கும் தன்மையில் சித்தர்கள் குறியீட்டு மொழியினைக் கையாண்டுள்ளனர்.